2026 ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW2) – முத்துச்செல்வம் |
| தகப்பனார் பெயர்: | முத்தையா |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இரண்டாம் நிலை காவலர் எண்.843, தேனி காவல்நிலையம் |
| வயது : | 34 |

02.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, திரு.ஜி.முத்துக்குமார், தலைமை காவலர் எண்.803 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது தேனி மாவட்டம், ஆயுதப்படையில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.04.2024ம் தேதியன்று தேனி, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் இரவு சுமார் 9.00 மணிக்கு அயல்பணியில் காவல்நிலையத்தில் இருந்தபோது, தலைமை காவலர் 1666 திரு.அசோக் என்பவருக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் அல்லிநகரம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட அன்னஞ்சி சுடுகாடு அருகில்

அரசால் தடைசெய்யப்பட்ட உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய கஞ்சா என்னும் போதைப்பொருள் விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்பேரில் தலைமை காவலர் அசோக் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து, அவர் உத்தரவின்பேரில் அசோக், முதல்நிலை காவலர் ஸ்ரீதர், மத்திய நுண்ணறிவு பிரிவு தலைமை காவலர் 1680 திரு.முத்துக்குமரன், அவர்களுக்கு உதவியாக நானும், அன்னஞ்சி, சுடுகாடு சென்றோம்.

2. அங்கு போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணிப்பில் இருந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த TN 67 AR 8003 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மற்றும் TN 60 J 2390 என்ற பதிவெண்கொண்ட TVS Star City ஆகிய இருசக்கர வாகனங்களின் அருகில் இருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட வடபுதுப்பட்டியை சேர்ந்த முருகன், அசார், அன்னஞ்சியை சேர்ந்த காளி, சசி ஆகியோரை இரகசிய தகவலாளி அடையாளம் காட்டியதின்பேரில் பிடிக்க முயன்ற போது முருகன் மற்றும் அசார் தப்பி சென்றுவிட்டனர். பின்னர் அங்கிருந்த காளி மற்றும் சசி ஆகியோரை போலீஸ் பார்ட்டி சகிதமாக சுற்றி வளைத்து, பிடித்து பெயர் முகவரியை கேட்டப்போது, முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தார்கள்.

3. எதிரிகள் காளி மற்றும் சசி தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ள எதிரிகள் தான். பின்னர் அருகிலிருந்த TN 67 AR 8003 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் முன்பகுதி சீட்கவரை சோதனை செய்தபோது, காக்கி நிற கவரில் சுமார் 1/2 கிலோ இலை, தளை, பூவுடன் கூடிய கஞ்சா என்னும் போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது. பின்னர் கஞ்சா இருப்பது சம்பந்தமாக அவர்களிடம் விசாரணை செய்தபோது, முன்னுக்கு பின் முரணாக கூறினார்கள். தப்பிச் சென்றவர்களை குறித்து விசாரித்தப்போது அவர்களை பற்றி எந்த விபரமும் கூற மறுத்துவிட்டார்கள்.

4. பின்னர் உயரதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டு, காவல்நிலையம் அழைத்து வர அதிகாரிகள் கூறினார்கள். 1வது எதிரி காளி என்பவரை என்னுடைய இருசக்கர வாகனத்தில் நானும், தலைமை காவலர் 1666 அசோக் ஆகியோரும் ஏற்றிச்சென்றோம். பின்னர் 2வது எதிரி சசி என்பவரை ஏற்றிக்கொண்டு TN 60 J 2390 இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அன்னஞ்சி காளியம்மன் கோவில் முன்பாக வரும்போது, இருசக்கர வாகனத்திலிருந்து காளி என்பவர் தப்பியோட முயற்சித்தப்போது, மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த 2வது எதிரி சசியும் தப்பிக்க முயற்சித்தப்போது முதல்நிலை காவலர் ஸ்ரீதர் எதிரி காளி என்பவரை பிடிக்க அவர் ஸ்ரீதரை கன்னத்தில் அறைந்து அசிங்கமாக தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டி, நாங்கள் இருசக்கர நிறுத்தி வருவதற்குள் அக்கம் பக்கத்திலிருந்த ஊர்மக்கள் வந்தார்கள்.

5. நாங்கள் எங்கள் அடையாள அட்டையை காண்பித்து, மதுவிலக்கு பிரிவு போலீசார், கஞ்சா வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு எதிரிகளை அழைத்து வந்ததாக கூறினோம். அப்போது அங்கிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரிகளான 5 வது எதிரி மனோஜ், 6 வது எதிரி முத்துராஜ், 4 வது சுபாஷ் எங்களை தகாத வார்த்தைகளால் அசிங்கமாக திட்டி, அப்போது காளி TN 60 J 2390 இருசக்கர வாகனத்திலிருந்த கஞ்சா பொட்டலத்தை எடுத்து சாலையில் கொட்டினார். தலைமை காவலர் முத்துக்குமரன் மற்றும் ஸ்ரீதர் மேற்படி எதிரிகளை பிடிக்க முற்பட்டப்போது, எதிரிகள் ஒன்றாக கூடி தலைமை காவலர் முத்துக்குமரன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர்களை முகம் மற்றும் கழுத்தை நெறித்து கொலை வெறி தாக்குதல் நடத்தினர்.

6. பின்னர் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் காயம்பட்ட தலைமை காவலர் முத்துக்குமரன் மற்றும் ஸ்ரீதரை காப்பாற்றி மருத்துமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லி, சிறப்பு சார்பு ஆய்வாளர் சம்பவ

இடத்திற்கு வந்து, அங்கு அவர் உதவியுடன் சாலையில் சிதறி கிடந்த கஞ்சாவை நானும், தலைமை காவலர் அசோக் காவல்நிலையம் வந்தோம். பின்னர் சம்பவம் தொடர்பாக தகாத வார்த்தையால் திட்டி, சட்டவிரோதமாக ஒன்றுகூடி, அரசு பணி செய்யவிடாமல் தடுத்து, கொலை மிரட்டல் விடுத்த எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீதர் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

7. 09.04.2024ம் தேதியன்று அன்னஞ்சி கிராமத்தில் காளியம்மன் கோவில் ஊர்திருவிழா என்றால் சரிதான். ஊர்திருவிழா என்பதால் ஊர்மக்கள் ஒன்றுகூடி இருந்தார்கள் என்றால் சரிதான். ஸ்ரீதர், முத்துக்குமரன் ஆகியோர்களை அடித்ததாக சொல்லப்படும் இடம் காளியம்மன் கோவில் முன்பகுதி என்றால் சரிதான். எதிரிகள் தாக்கியதையும், விலக்கிவிட்டதையும் ஊர்மக்கள் பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி காளிராஜ் கஞ்சா பொட்டலத்தை எந்த இடத்தில் கொட்டினார் என்றால் கோவில் முன்பிருந்த சாலையில் கொட்டினார். நான் எத்தனை மணிக்கு அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேன் என்றால் இரவு சுமார் 10.30 மணி இருக்கும். எதன் மூலம் தகவல் சொன்னேன் என்றால் கைப்பேசி மூலம் தகவல் சொன்னேன்.

8. நான் தான் முதன் முதலில் அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு சம்பவம் குறித்து தகவல் சொன்னேன் என்றால் இல்லை, தலைமை காவலர் 1666 அசோக் என்பவர் தகவல் சொன்னார். எவ்வளவு நேரம் கழித்து காவல்நிலையத்திற்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சுமார் 1/2 மணி நேரம் இருக்கும். காவல்நிலையத்திலிருந்து காவலர்கள் வந்து தான் கொட்டியிருந்த கஞ்சாவை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட ஸ்ரீதரை எதன் மூலம் க.விலக்கு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தேன்

என்றால் சுமார் 10.00 மணிக்கு ஆட்டோவில் அனுப்பி வைத்தேன். நான் அனுப்பி வைத்த ஆட்டோவின் பெயரோ, ஓட்டுநரின் பெயரோ சொல்ல முடியுமா என்றால் பயணிகள் வழிப்போக்கு ஆட்டோவாகும்.

9. கோவில் திருவிழா நடந்துகொண்டிருக்கும்போது அந்த வழியாக ஆட்டோ வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அதேபோல் ஆட்டோவில் ஏறினால் க.விலக்கு அரசு மருத்துமனைக்கு 1/2 மணிநேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார் என்றால் மறுநாள் 10.04.2024ம் தேதி மாலை 7.00 மணிக்கு எங்கள் காவல்நிலைய அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். இரகசிய தகவல் எப்படி கிடைத்தது என்றால் தலைமை காவலருக்கு கிடைத்த தகவல் ஆகும். எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்று கூறினார் என்றால் சுமார் 8.40 மணி இருக்கும்.

10. சுடுகாடு பகுதி இருட்டான பகுதி என்றால் விளக்குகள் இருக்கும். நானும், மற்ற காவலர்களும் சம்பவ இடத்திற்கு எவ்வாறு சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தப்போது இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எந்த இருசக்கர வாகனத்தில் நான் பயணித்தேன் என்றால் TN 99 D 1202 Honda Shine என்ற இருசக்கர வாகனத்தில் பயணித்தேன். மற்றொரு இருசக்கர வாகனம் யாருடையது என்றால் தலைமை காவலர் முத்துக்குமரனின் வாகனமாகும். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன இருசக்கர வாகனங்களின் எண்ணையும், மேற்படி வாகனத்தில் நான் பயணித்ததையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

11. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கவில்லை என்றாலும், சம்பவத்தின்போது நான் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர்களை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் எதிரிகளை

கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருப்பதாக சொல்லி அடையாளம் காட்ட சொன்ன போது தெரிந்து கொண்டேன். எந்த தேதியில் அடையாளம் காட்டினேன் என்றால் 13.04.2024 ம் தேதியாகும். எதிரிகளை நான் காவல்நிலையத்தில் வைத்து பார்த்து அடையாம் காட்டவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் பணிபுரியும் காவலருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் மனோஜ், சுபாஷ், அஜித், ஹரிஹரன் மற்றும் பெயர் தெரியாத 20 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

12. யார் யார் அடிபட்ட காவலர்களை எந்த இடத்தில் எங்கு தாக்கினார்கள் என்றால் கூட்டமாக இருந்ததால் சரியாக தெரியவில்லை. 25 நபர்கள் தாக்கும்போது தாக்கப்படும் நபருக்கு காயங்கள் உடல்பகுதி முழுவதும் காயங்கள் இருக்கும் என்றால் சரியல்ல, தாக்கும் இடத்தை பொறுத்தது. அதிகமான காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். ஸ்ரீதர் எப்போது புகார் கொடுத்தார் என்ற விபரம் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 10.04.2024 ம் தேதி ஆய்வாளர் என்னை விசாரணைக்கு அழைத்த போது தெரிந்து கொண்டேன். எதனடிப்படையில் 1/2 கிலோ இருந்தது என்று கூறினேன் என்றால் கையில் எடுத்து பார்த்து தெரிந்து கொண்டேன். கஞ்சா இலை, பூ மற்றும் காயுடன் இருந்தது என்றால் சரிதான். 1வது எதிரி காளிராஜ் கஞ்சாவை சாலையில் எறிந்து அரைமணி நேரம் கைப்பற்றியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றும்போது காற்றில் கஞ்சா அடித்து செல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

13. மீதமிருந்து 200 கிராம் கஞ்சாவை கைப்பற்றினார்கள். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை நீதிமன்றத்திற்கு அனுப்பும்போது மண்ணுடன் சேர்ந்திருக்கும் என்றால் சரிதான். நான் சொன்னவாறு சாலையில் கஞ்சாவை கொட்டவில்லை என்றாலும், அரைமணி நேரம் கழித்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல,

தேனி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு குற்ற எண்.362/2024 என்ற வழக்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எதிரிகள் அன்னஞ்சி கிராமத்தில் இளைஞர் நற்பணி மன்றத்தின் உறுப்பினர்கள் என்றாலும், பெயர் பலகையை பார்த்து அவர்களது பெயர்களை தெரிந்து கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்ட ஸ்ரீதர் திருவிழாவின்போது மது அருந்தி பிரச்சனை செய்ததால் ஊர்மக்கள் அவருக்கு அறிவுரை செய்து அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. அதனை அவர் அவமானமாக எடுத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 4வது சுபாஷ் சம்பவ தேதியில் ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பிற்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் 1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.02 18:11:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.07.2026